79


# பகுத்தறிவு

கழக வார இதழ் — ஆசிரியர்:- ப. கண்ணன்

மலர் 6 | சேலம் 2-11-56. ★ விலை அணா ஒன்று. | இதழ் 18


# கிருஷ்ணன் கடவுளல்ல; கொலைகாரன்!

“சிசுபாலன், ஜராசந்தன், பீஷ்மன் முதலியவர்களைக் கொன்றவன் கிருஷ்ணன், அழகான மனைவி, மகள் ஆகியவர்களைப் பெற்றிருந்த ஆண்கள் கிருஷ்ணனைக் கண்டு பயந்து கொண்டிருந்தனர். ஏனெனில் கிருஷ்ணனுக்கு வயதாகி கிழவனாகி விட்டாலும், அழகில் மயங்கி பெண்கள் அவனோடு ஓடிவிடுவார்களே என்று நடுங்கி வாழ்ந்தனர்.

திரௌபதி என்ற பெண்ணுக்காக மகாபாரதப் போரை கிருஷ்ணன் தொடங்கினான். கோடிக்கணக்காக மக்களைக் கொன்று, பாண்டவர்கள் என்ற பித்தர்களுக்கு ராச்சியம் பெற்றுத் தந்தான். நண்பர்களையும், குருவையும் அஞ்சாமல் கொலை செய்தான்.

கிருஷ்ணன் இறுதிக் காலத்தில் “தெய்வமே! என் வாழ்க்கை முழுதும் நான் கொலைகள் தவிர ஒரு நன்மையும் செய்யவில்லை. எனது வாணாள் வீணாயிற்று. என்னை விரைவில் அழைத்துக்கொள்!” என்று அழுதுகொண்டே செத்தான்.”

உத்தரப் பிரதேச கவர்னர், திரு. கே. எம். முன்ஷியின் மனைவி லீலாவதி முன்ஷி, பம்பாய் இந்திய வித்தியாபீடம் என்ற நிறுவனத்தார் வெளியிட்டுள்ள புத்தகமொன்றில் “கிருஷ்ணனின் இறுதிக் காலம்” என்ற கட்டுரையில் இவ்வாறு கூறுகிறார்:

காலஞ்சென்ற தமிழ்ப் பேராசிரியர்—பார்ப்பனீயச் சார்புடைய தமிழறிஞர், எஸ். வையாபுரியார் பகவான் கிருஷ்ணனுடைய வரலாற்றினை சரித்திர ரீதியாக ஆராய்ந்து, “கிருஷ்ணன் கடவுளல்ல. பிற்காலத்திலே கடவுளாக ஆக்கப்பட்டவன்” என்று ஏற்கனவே கூறியிருக்கிறார்.

தோழியர், லீலாவதி முன்ஷியும் பேராசிரியர் வையாபுரியாரும் பகுத்தறிவுவாதிகளின் தொடர்பற்றவர்கள்; திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேராதவர்கள். அவர்களே சொல்லுகிறார்கள்: ‘கிருஷ்ணன் கடவுளல்ல; மனிதனே; மனிதரிலும் ஒழுக்கமற்றவன்; கொடியவன்; கொலைகாரன்; சாகும்போது கடவுளை நோக்கிக் கதறியவன்” என்று.

இந்தக் கொடியவனை, கொலைகாரனை, கோயிலில் வைத்துக் கும்பிடலாமா? இவனொரு கடவுளா? இவனுக்குத் தேர் திருவிழா நடத்தலாமா? பிரார்த்தனை, அபிஷேகம், உண்டியல் என்று பகுத்தறிவையும், பணத்தையும் பாழாக்கலாமா?

இந்தக் கொலைகாரன், அர்ச்சுனனுக்கு, உறவினரைக் கொலை செய்! என்று போதித்ததாகக் கூறப்படும் கொலை நெறியை-கொலை நூலை பகவத்கீதையென்று பாராட்டலாமா? பரப்பலாமா?

‘பித்தர்கள்’ என்று தோழியர் லீலாவதி கூறுகின்ற, ஒரு தந்தைக்குப் பிறவாத பஞ்சபாண்டவர்களுக்காகவும், அவர்களது பொதுவுடைமைக் கற்பரசி—திரௌபதைக்காகவும் கிருஷ்ணன் நடத்திய போராட்டக் கதையை மகாபாரதம்—பாரதப் பண்பாட்டின் பிறப்பிடம்—பாரத கலாசாரத்தின் கலங்கரை விளக்கம்—என்றெல்லாம் கே. எம். முன்ஷி, ராசேந்திரப்பிரசாத். ஜவகரிலால் நேரு போன்ற தலைவர்கள் போற்றுவதின் மர்மம் என்ன?

[8-ம் பக்கம் தொடர்ச்சி]

புத்தர் நெறி.

# எல்லோரும் ஓர்குலம்.

பி. வி. இராமசாமி.

எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓரினம் என்ற சாதி பேதமற்ற சமத்துவக் கொள்கையினை, 2000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய பேரறிஞர் புத்தர் விளக்கியுள்ளார். அஃது வருமாறு:

"புத்தர்பிரான், இள வேனில்—மாலை, அறிவுச்சோலையிலே ஓய்வு பெற்றமர்ந்திருந்தார்.

மன்னன் பரசேனஜித்தன்; உயர் குலத்தாரென்பவர் பலர் சூழவந்து கண்டனன். புத்தர் பிரானை நோக்கி மன்னன் வினவினன்:

அறிஞர் பிரானே! 'இது என்ன அநியாயம்' தங்கள் தலைமைச்சீடர் ஆனந்தர், மதங்க சாதி, சண்டாளப் பெண்ணின் கையால் தண்ணீர் குடித்தார். தாங்களோ அந்த சண்டாளப் பெண்ணையே பிட்சுவாக்கிக்கொண்டு விட்டீரே! அடுக்குமா இந்த அநாசாரம்?

புத்தர்:- இதோ, நக் காலடியில் இருப்பது மண். நீர் அணிந்திருக்கிறீர் பொன், தங்கநகைகள். இரண்டுக்கும் வேற்றுமை காணப்படுகிறதல்லவா?

மன்னன்:- ஆம்.

புத்தர்:- உம்மைச் சூழ இருக்கின்றனரே, உயர்சாதிக்காரர் என்று கூறிக் கொள்பவர்கள்; இதோ எமது சூழாமில் உள்ளனரே சண்டாளர்; தாழ்ந்த சாதியார் என்று நீங்கள் குறிப்பிடுகிறவர்கள்; இவ்விருவருக்கும் உருவ—அமைப்பிலே, பிறப்பு முறையிலே வேற்றுமையுண்டா?

உயர்சாதியினர், நெருப்பிலே இருந்து பிறந்தனரா? ஆகாயத்திலிருந்தோ—காற்றிலிருந்தோ—அல்லது நிலத்தைக் கிழித்துக்கொண்டோ பிறந்தனரா? அவர்கள் எல்லாரும் பெண்ணின் கர்ப்பத்தில் உற்பத்தியாகி — இயல்பான இயற்கை முறையில் பிறந்தவர்கள் தானே?

மன்னன்:- தர்மசாஸ்திரம் அப்படி வகுத்துள்ளதே.

புத்தர்:- ஒரு விளக்கம். பிராமண—க்ஷத்ரியர்—வைசியர்—சூத்திரர் என்பது நீங்கள் கூறும் பிரிவினை. சரி. ஒரு க்ஷத்ரியர் பெரும் பணக்காரனாகி விடுகிறார். அப்போது, மற்ற மூன்று பிரிவினரில் யாரையாவது தன் பணியாளராக வைத்துக்கொள்ள முடியுமா?

மன்னன்:- முடியும்.

புத்தர்:- மூன்றும் பிரிவினரோ, நான்காம் பிரிவினரோ, பெரும் சீமானாகிவிட்டால், மற்ற இரு உயர்ந்த பிரிவைச் சேர்ந்தவர்கள் பணிவிடை செய்வரா?

மன்னன்:- செய்வர்.

புத்தர்:- உண்மை இப்படியானால்; இந்த நான்கு இனங்களும் ஓரே சமநிலையினர் ஆகின்றனர் என்பது புலப்படவில்லையா?

மன்னன்:- அப்படித்தான் புலப்படுகிறது.

புத்தர்:- மற்றொரு உதாரணம்!

ஒரு க்ஷத்திரியன் திருடினால்—கொலை செய்தால்—பொய் பித்தலாட்டம் செய்தால்—வசை மொழி பொழிந்தால்—கேடு நினைத்தால்; தவறான நோக்கம் கொண்டால், அவன் அல்லல்படுவானா?

மன்னன்:- ஆமாம்.

புத்தர்:- முற்றும் உண்மை. சரி. இதேபோல் மற்ற மூன்று பிரிவினர் செய்தால்?

மன்னன்:- அவர்களும் துயருறுவர்.

புத்தர்:- இதில் நான்கு பிரிவினர்களுக்குள் வேற்றுமையுளதா?

மன்னன்:- இல்லை.

புத்தர்:- மற்றொரு விளக்கம். ஒரு உயர் சாதியான் கொள்ளைக்காரனானால்—திருடினால், அவனைக் கையும்மெய்யுமாகப் பிடித்து, உம்முன் கொண்டு வந்து நிறுத்தினால்—நீர் என்ன செய்வீர்?

மன்னன்:- தடையின்றி. தண்டிப்பேன்.

புத்தர்:- மற்ற மூன்று பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இம்மாதிரி செய்தால்?

மன்னன்:- அவர்களுக்கும் உரிய தண்டனை விதிப்பேன்,

புத்தர்:- இதிலும் அவர்களுக்குள் வேற்றுமையில்லையே?

மன்னன்:- இல்லை.

புத்தர்:- இந்த உயர் சாதியார் ஒருவர் பிட்சுவாகி— அறநெறித் தொண்டராகி, உமது அரண்மனைக்கு வந்தால் என்ன செய்வீர்?

மன்னன்:- உரிய மரியாதை உபசாரம் நடத்துவேன்.

புத்தர்:- மற்ற் மூன்று பிரிவுகளைச் சேர்ந்தவர் பிட்சுவானால், தோற்றத்தில் வேற்றுமை காணுமா? அறிவிலும் சிறப்பிலும் பொதுநலப்பணியிலும் வேற்றுமை காணுமா?

மன்னன்:- மெய்யொளி பெற்றேன்; புத்தரே! மற்றொரு வினா: உயர்ந்தோர் சிறந்தோர் என்போர் யாவர்? அவர்களுடைய சிறப்பிலக்கணம் யாதோ?

புத்தர்:- யாருடைய சிந்தை நடப்புகளால் கலக்கமடையாதிருக்கிறதோ—யாருடைய மனம் குழப்பமற்றிருக்கிறதோ, யார் புண்ணிய பாபம் என்பன பற்றி சிந்திப்பதில்லையோ, அவன் துக்கம், அச்சம் என்பனவற்றைக் கடந்தவனாவான்.

மலர்களைக்கொண்டு பலவித அலங்காரமாலைகள் செய்வதுபோல், நல்லறிஞன் தமது திறமையால், வாழ்க்கையில் பலவித நற்செயல்கள் செய்யவல்லான்.

ஆசையற்றால் துக்கமில்லை. இன்ப வாழ்வுக்கு வழிசெய்யும் பண்புகள், நற்காட்சி, நற்சிந்தை, நல்வாய்மை, நற்செயல், நல்வாழ்க்கை, அன்பு, பரோபகாரம், ஊக்கம் நல்வழி, மன அமைதி பொதுநலப்பணி ஆகியவைகளாகும். இத்தகைய நற்பண்புகளைக் கொண்டவர்களே உயர்வும் சிறப்பும் பெற்றவர்களாவர்."

★★

# தாய் ஒருத்தி; தந்தை பலரா?

## எதிரொலி

ஸ்ரீ வில்லிப்புத்தூரில், குளத்தில் குளித்த இளம் பெண்களை வட்டமிட்ட வாலிபர்கள், கைது செய்யப்பட்டார்கள்.

—செய்தி.

ஐயயோ! கிருஷ்ண பரமாத்மாவின் வாரிசுகளைக் கைதுசெய்யலாமா இந்தப் போலீசார்? நாத்திகர்கள்! நாத்திகர்கள்!

*　　*　　*

காமராசர் போன ரெயிலை, தமிழரசுக் கழகக் காரர்கள் நிறுத்தினார்கள்.

—செய்தி.

தேர்தலில் காங்கிரசை ஆதரிப்பதை நிறுத்த வேண்டுமே!

*　　*　　*

சாப்பாட்டைவிட அறிவுதான் முக்கியம்.

—கிருபானந்தவாரி

ஐயாவோ! பக்தி பாழாகி விடுமே!

*　　*　　*

சென்னை புதிய கவர்னர் யாரென்று அறிவிக்கப்படவில்லை.

—செய்தி.

ராஜாஜியின் பெயர் இழுபடுவதாக இயம்புகிறதே ஒரு ஊர்க்குருவி.

*　　*　　*

சட்டசபைத் தேர்தலில் இரண்டே கட்சிகள் உள்ளன:

—பெரியார்.

கிடையாது. ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லை. குடியரசு ஒருபித்தலாட்டம், தேர்தல் என்பதே மடத்தனம் என்று சொல்லுகின்ற கட்சியும் உண்டு.

*　　*　　*

தமிழா! தீபாவளி என்பது ஆரியனின் ஆபாசப் பண்டிகை! நினைவிருக்கட்டும். அதைக் கொண்டாடாதே!

—"விடுதலை"

காமராசர் அதைக் கொண்டாடியே தான் தீருவார். தமிழா! அதையும் மறந்து விடாதே!

---

"கடவுளை நம்பாதவர்களுக்கு ஓட்டுப் போடலாமா?" என்று கேட்கிறார் காமராசர். நாமும் இதுவரை பல மாநாடுகள் கூட்டியிருக்கிறோம். எத்தனையோ தீர்மானங்கள் போட்டிருக்கிறோம். ஆனால், "நாங்கள் கடவுள் இல்லை என்கிறோம்" என்று ஒரு தீர்மானம் கூட போட்டது கிடையாதே! கடவுளைப் பற்றிப் பேசுகிறோம். அது தவறு என்று சொல்ல முடியுமா? கடவுளைப் பற்றிப் பேசாதவர்கள் யார்? "தென்னாட்டுக் கோயில்கள் விபச்சார மடங்கள்" என்று காந்தியார் சொல்லியிருக்கிறாரே! அவருடைய சீடர் தானே இந்தக் காமராஜர்! இன்னும், சித்தர், இராமலிங்கர், பட்டினத்தார் ஆகிய இவர்களெல்லாம் கடவுளைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள்.

தி. மு. க. ஒரு விடுதலை இயக்கம்; வெறும் அரசியல் கட்சி மட்டுமல்ல! நமது இலட்சியம் சமுதாயத்தை ஒட்டி வகுக்கப்பட்டது. இந்த நாட்டிலே இருந்துவரும் சாதி அமைப்பு முறைகளினாலே, வாழ்க்கையில் சிலர்மட்டும் வளரவும், பலர் தேயவும் நேரிடுகிறது. இத்தகைய சமுதாய அமைப்பை மாற்றியமைக்க நாம் முயற்சி செய்கையில், "இதெல்லாம் சாஸ்திரப்படி எழுதப்பட்டது" என்று சிலர் சொல்லுகின்றனர். "அப்படியானால் அந்த சாஸ்திரத்தைக் கொண்டுவா! அதையும் ஒழிக்க வேண்டும்" என்று நாம் கூறுகிறோம். உடனே "சாஸ்திரம் கடவுளால் எழுதப்பட்டது" என்கின்றனர். பிறப்பினால் உயர்வு, தாழ்வு, கற்பிக்கும் அந்த சாஸ்திரத்தை யார் எழுதியிருந்தாலும் சரி, அவர்களும் அந்த சாஸ்திரத்துடன் சேர்ந்து வெளியேற வேண்டும் என்கிறோம்.

ராஜகோபாலாச்சாரியாரும் பாரத மாதாவின் புதல்வராம்! காமராச நாடாரும் பாரதமாதாவின் புதல்வராம்! முத்துராமலிங்கத் தேவரும் பாரதமாதாவின் புதல்வராம்! ஒரே தாய்க்குப் பிறந்த குழந்தைகளுள் ஒன்று ஆச்சாரியாராகவும், மற்றொன்று நாடாராகவும், இன்னொன்று தேவராகவும் இருந்தால், அந்தத் தாயைப் பற்றி நாம் என்ன நினைப்பது?

ஒரு மனிதன் தேகப்பயிற்சி செய்யும்பொழுது, எல்லா உறுப்புகளும் வலிவடையவே முயற்சி எடுத்துக் கொள்வான். தண்டால் மட்டும் எடுத்தால், கைகளும், மார்பும்தான் பலப்படும். கால்களைப் பலப்படுத்த அதற்கேற்ற தேகப்பயிற்சியைச் செய்ய வேண்டும். பாரத மாதா வெறும் தண்டால் எடுக்கிறாள். அதனால்தான், அவளுடைய கால்கள் (தென்னகம்) மெலிந்து போகின்றன.

(தோழர், டி. கே. தாமரைச்செல்வனின் சேலம் பேச்சு, இன்னும் வரும்)


**பகுத்தறிவு.**

(வாரஇதழ்)

கையொப்பத்தொகை:

ஆண்டு 1-க்கு 3-8-0

ஆறு மாதங்கள் 2-0-0

தனிப்படி 0-1-0

விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு, முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.

பகுத்தறிவு அலுவலகம்,

சேலம்-1.

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
> —திருவள்ளுவர்.

# இதயம்

மலர் 6 | சேலம் 2—11—56 | இதழ் 18

## தேர்தல் முனையிலே நாம்.

நாடெங்கும் 13 நாட்கள், 1500 மைல்களுக்கு மேல் சுற்றி, 21 இடங்களிலே தங்கி, 6,500 பேர்களின் கருத்துக்களைப் பதிவுசெய்து கொண்டு திரும்பியது, பொதுச் செயலாளர் நாவலர், நெடுஞ்செழியனார் தலைமையிலே சென்ற தேர்தல் ஆய்வுக்குழு.

கிடைத்த தகவல்களையும், கருத்துக்களையும் சீர்தூக்கிப் பார்த்து, பொதுத் தேர்தலில் நாம் 150 இடங்களுக்குப் போட்டியிட வாய்ப்பிருக்கிறது என்ற நல்ல செய்தியினை, 24-10-56-ல் சென்னை கோகலே மண்டபக் கூட்டத்தில் அறிவித்தார் அறிஞர் அண்ணா! மகிழ்ச்சிக்குரிய செய்தியே; எனினும் நம்மீது சுமரும் பொறுப்புகளை நினைக்கும்போது, மகிழ்ச்சி மறைந்து அச்சம் தலைதூக்குகின்றது.

திராவிட முன்னேற்றக் கழகம் வெறும் தேர்தல் கழகமன்று. அது தாழ்த்தப்பட்ட ஒரு இனத்தின் உயிர் மூச்சாக—நாட்டின் அடிமை விலங்கொடிக்கும் விடுதலைப்பாசறையாக-விளங்குகின்ற மாபெரும் இயக்கம். விடுதலை பெற்ற திராவிடத்தில் பகுத்தறிவு பூர்வமான சமதர்மக் குடியரசு நிர்மாணிக்கும் அதன் போராட்டப் பணியிலே பலமுனைகள் அமைகின்றன. அதிலே ஒன்று தேர்தல் முனை. தேர்தல் தவறான செயலன்று. குடியரசு நாட்டிலே ஆட்சியினரை உருவாக்கும் உலைக்களம்—கொள்கை முரசொலிக்கும் போர்க்களம் அதுவே!

"தேர்தல் என்பது பித்தலாட்டம், பணம் படைத்தோரே வெல்ல முடியும், அந்தத் தகுதி காங்கிரசுக்கே உண்டு" என்ற நிலையில், பணபலமற்ற நாம்—பொய் புனைசுருட்டு கல்லாத நாம் தேர்தலில் ஈடுபடுவதென்பது எளிதான செயலன்று. எனினும் ஈடுபடுகின்றோம், அடிமைப் பட்டுழலும் திராவிடத்தின் விடுதலைக் கோரிக்கையினை முன்வைத்து! பணம் படைத்தோரே வெல்ல முடியும், சட்டசபைக்குச் செல்ல முடியும் என்ற நிலையிருப்பது நாட்டுக்கும் நல்லதன்று; குடியரசு முறைக்கும் சிறப்புத் தருவதன்று. இருக்கும் இழிநிலையினை நாம் மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

நம்பிக்கைக்கும், நன்மதிப்புக்கும் உரிய நம்மருந் தலைவர்கள் நம்மைக்காட்டிலும் இதனை நன்கறிவர். தேர்தல் முனையிலே நாம் இயங்க வேண்டிய நன் முறைகளை வகுத்தளிப்பர்; கண்ணியம், கடமை, கட்டுப்பாடுகளைத் தவறாது கைக்கொண்டு, தலைமை காட்டிய வழியே பணியாற்றி, நமது இலட்சிய வெற்றியினைப் பெறுவோமாக. வெல்க திராவிடம்! ●

## கொடிப்போர்; கழக வெற்றி.

சேலம் அம்மாப்பேட்டையில், காந்தியார் சிலை வைக்கப்பட்டுள்ள பொது மண்டபத்திலே மற்றவர்களைப்போல தி. மு. க. கொடியையும் ஏற்றினர் கழகத் தோழர்கள். அந்த வட்ட காங்கிரஸ் தேசிய வாலிபர் சங்கத்தினர் அதனைத் தடுத்தும், பிடுங்கி எறிந்தும், மண்டபம் எங்களது என்று அட்டகாசம் செய்தனர், சென்ற ஆண்டில். சேலத்திலே பரபரப்பைஉண்டாக்கிய இச்சம்பவம் நீதி மன்றத்திற்குச் சென்றது.

சேலம் முதல் வகுப்பு நீதிபதி, "மண்டபம் தேசிய வாலிபர்சங்கத்திற்கே சொந்தம்" என்று தீர்ப்பளித்தார். இதனை எதிர்த்து அம்மாப்பேட்டை தி. மு. க. தோழர்கள், சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தனர்.

வழக்கினை விசாரித்த நீதிபதி கனம், சோமசுந்தரம் அவர்கள் 28—10—56-ல், தமது தீர்ப்பினை வழங்கினார்:

"மண்டபம் சர்க்காரின் சொத்து, நகரசபையின் உபயோகத்திற்காகத் தரப்பட்டிருக்கிறது. நகரசபையின் அனுமதியின்றி அங்கு கொடி ஏற்றிக்கொள்ள எந்த ஒரு கட்சிக்கும் தனியுரிமை கிடையாது" என்ற நல்ல தீர்ப்பு கிடைத்தது. நாம் மகிழ்கின்றோம்.

பொதுச் சொத்தை—சர்க்கார் உடைமையைத் தம்முடையதென்று கூறி, தடித்தனம் புரிந்த சேலம் காங்கிரஸ்காரர்கள் கொடி நாட்டும் உரிமைப் போரில் தோற்றனர்; நம் தோழர்கள் வென்றனர்! வாழ்த்துகிறோம்; பாராட்டுகிறோம் முன்னின்று பணிபுரிந்த தோழர்களை! ●




முல்லை:- எங்கே; நாஞ் சொல்ற மாதிரி மட மடன்னு சொல்லு பாக்கலாம்.

பச்சை:- முல்லை! இதிலே நான் ஜெயிச்சேன். எங் கையாலே நாலு அறை நீ வாங்கிக் கணும்.

முல்லை:- சரி. "அடடா நரி கரடேறுதடா ஒன்பது நரியினில் ஒரு நரி சின்ன நரியடா சின்ன நரி முதுகினில் ஒருபிடி நரை மயிரடா நரைமயிர் நுனியினில் புதுமலர் மணமடா புது மலர் மணமதில் குமரியின் நினைவடா!"

பச்சை:- (நிதானமாக) அடடா, நரி கரடேறுதடா. ஒன்பது நரி யினில் ஒருநரி....சின்ன, நரியடா! சின்ன நரி முதுகினிலே!....

[முன் இதழ் தொடர்ச்சி]

மைத்:- கவலை வேண்டாம். கர்த்தர் இருக்கிறார் காப்பாற்ற. படைத் தலைவர்க்கெல்லாம் தலைவன் நீர்! வாய்ப்பு இருக்கிறது, விவேகத்தோடு நடந்துகொண்டால். பரிசு ஆயிரம் கழஞ்சு பொன்; பிறகு பல்லவநாட்டு அமைச்சர்!

விக்ர:- எப்படிச் செய்வதென்று........

மைத்:- மலைக்காதீர்!

("மன்னர் போர்முனையில் பகைவனோடு போராடிக் கொண்டிருக்கும்போது, பின்புறமிருந்து முதுகிலே ஒரு குத்து. ஒரு வீச்சு. உடனே மறைவு. அவ்வளவுதான் கூட்டத்திலே யாரோ, எவரோ என்று போய்விடும். அடிக்கடி வராது இதுபோல் அரிய சந்தர்ப்பம்." சேனாபதியின் காதருகே ரகசியமாகச் சொல்கிறான் மைத்ரேயன்)

மைத்:- (வெளிப்படையாக) என்ன சொல்லுகிறீர்?

விக்ர:- அப்படியே செய்து முடிக்கிறேன் சுவாமி!

(முரசு, தாரை, எக்காள ஒலி கேட்கிறது)

விக்ர:- அதோ, முரசொலி கேட்கிறது! படை புறப்பட ஆயத்தமாகிவிட்டது. நான் வருகிறேன். வணககம்.

(வணங்கிச் செல்கிறான்)

## காட்சி 11.

(முல்லையின் வீடு. பச்சையும், அவளும் இருக்கின்றனர்)

முல்லை:- (வெடுப்பாக) பனங்காயி! சே! சே! இப்படி ஆமை வேகத்திலே ஆருந்தான் சொல்லுவாங்க! நீயென்ன!

பச்சை:- முல்லை! வேகம் பெரிசா? பாவம் பெரிசா? நான் புலவர் மகன். பாவத்தோட பக்குவமா, புரியராப்லேதாஞ் சொல்வேன். அடடா தடடா தடாதடா வெல்லாம் ஒதவாது.

முல்லை:- அப்படின்னு தோல்வி! தோல்வி! வேகம் ஒனக்கு வராது!

பச்சை:- நெனச்சுகிட்டே! வச்சுப்பாரேன் ஒரு ஓட்டப் பந்தயம் நாந்தான் ஜெயிப்பேன்.

முல்லை:- ஓட்டப் பந்தயமா? அதிலே ஔறுவாயனும் ஜெயிக்கலாம்! அதெல்லாம் கதவுக்கு வெளியே. இன்னொரு பந்தயம், அதிலே தோத்தவங்க ஜெயிச்சவங்களுக்கு மூணுமாசம் அடிமையா இருககணும். என்ன சொல்றே?

பச்சை:- அடிமையா? அப்படின்னு, சொல்ற வேலையெல்லாஞ் செய்யணுமோ?

முல்லை:- ஆமாம். நான் ஜெயிச்சேன்னு வச்சுக்க. ஒனக்கு உத்தரவு போடுவேன்: சோறக்கு—ஆக்கணும். சேலை துவை—துவைக்கணும். வீட்டைப் பெருக்கு—பெருக்கணும். வென்னீர் போடு—போடணும். படுக்கையை விரி—விரிக்கணுமு.

பச்சை:- நான் ஜெயிச்சா உத்தரவு போடுவேன்: சோறு போடு—போடணும். கைகழுவு—கழுவணும். அப்பறம் படுக்கையிலே ஃகாயா

படுப்பேன்! காலைப்புடி—புடிக்கணும். வெத்திலே மடி—மடிக்கணும் வாயிலே வையி—வைக்கணும். அப்புறம்....அப்புறம்....வந்து....

முல்லை:- கன்னத்திலே குடுன்னு சொல்லுவே. ஓங்கிக் குடுப்பேன் இப்படி.

(அவன் கன்னத்தில் அறைகிறன்)

பச்சை:- முல்லை! ஏது, ஏமாந்தா அறைஞ்சிடுவே போலே இருக்குதே!

முல்லை:- பந்தயத்திலே நான் ஜெயிச்சவ; ஓங்கணக்குப்படி நாலுக்கு இன்னும மூணு பாக்கி. இந்தா வாங்கிக்கோ!

(அவள் அறைய, அடிக்குத் தப்பி லாவகமாகப் பின்னல் நகருகிறன். தள்ளாடி உள்ளே நுழைந்த ஒரு வீரன் பச்சைமேல் மோதிவிழுகிறன்)

பச்சை:- (அஞ்சி) ஐயயோ? இதென்ன பேயா? பிசாசா?

முல்லை:- எதுவுமில்லை. ஒரு ஆளு. (பார்த்து) அடடே! பாவம்! பசி மயக்கம போலேருக்குது.

வீரன்:- (குழறி) அம்மா! தாகம்....கொஞ்சம் தண்ணி.

(முல்லை ஓடிச்சென்று தண்ணீர் கொண்டுவருகிறள். அதை வாங்கி வாயில் ஊற்றுகிறன் பச்சை. தெளிந்து எழுந்திருக்கிறன்)

பச்சை:- யாருப்பா நீ? என்ன ஒடம்புக்கு?

வீரன்:- (நடுங்கிக்கொண்டு) குருக்கோட்டையிலேருந்து வர்றேன். குருதை வெளியே நிற்குது. ஓவியர் மைத்ரேயரை அவசரமா பார்க்கணும். வழியிலேயே ஜொரம் வந்துடிச்சு. குளிரு தாங்க முடியலே. நாக்கெல்லாம் வரண்டு போச்சு. ஐயா! மைத்ரேயர் வீடு எங்கேருக்குது?

முல்லை:- (சந்தேகித்து) அவசரமா பாக்கணுமா? அப்படி என்ன சேதிங்க? சொல்லுங்க.

வீரன்:- (நடுங்கியவண்ணம்) ராஜாங்க சேதி-ஓலை கொண்டாந்தேன். அவசரமா அவருகிட்டே சேக்கணும். சேத்தப்புறம் நான் செத்தாலும் பாதகமில்லே. ஐயா! ஐயா! எடத்தைச் சொல்லுங்க ஐயா!

பச்சை:- இந்தாய்யா! கெழக்காலே போனா மண்டபத் தெரு; அதுலே வலது பக்கம் மூணாவது வூடு வித்யாவதிக்குச் சொந்தம். அங்கெதான் இருக்காரு மைத்ரேயர். பொறப்படு.

(வீரன் வணங்கிவிட்டு போகிறன் தள்ளாடிய வண்ணம்)

முல்லை:- (கடுப்பாக) நீயொரு மனுஷன்! நீ எங்கேருந்து வர்றான்னு அவனைக் கேட்டியா?

பச்சை:- குருக்கோட்டையிலேருந்து.

முல்லை:- நம்மவனா? அன்னியனா?

பச்சை:- அன்னியன்!

முல்லை:- (வியந்து) அடஐயா! குருக்கோட்டை மேலெதானே நம்ம மகாராஜா படையெடுத்திருக்காரு இவன் அங்கேருந்துதானே சேதி கொண்டாந்திருக்கான். ராஜாங்க சேதின்னுனே! நேர்மையா மகாராணிகிட்டே, மந்திரிகிட்டேல்ல போகணும்? மைத்ரேயருகிட்டே போவானேன்? ஏதோ மர்மம் இருக்குது ஐயா இருக்குது!

பச்சை:- (யோசித்து) முல்லை! மைத்ரேயர் கூட நம்ம நாட்டாரல்ல, தெரியுமா ஒனக்கு?

முல்லை:- (வியந்து) அப்படியா? மண்டுவே! பொறப்படு வித்யாவதி வீட்டுக்கு. இளைய மன்னர் சந்திரவர்மரை இப்பவே பார்க்கணும். விபரத்தைச் சொல்லணும்.

பச்சை:- அவுரு சக்திமுனையரைப் பார்க்க கோயிலுக்கல்ல போயிருப்பாரு.

முல்லை:- வா, நாம்பளும் கோயிலுக்கே போகலாம்.

பச்சை:- கோயிலுக்கா?...கோயிலுக்கேவா?

முல்லை:- (பழித்து) ஆமா; ஆமா! கோயிலுக்கேதான்!

(அவனை இழுத்துக்கொண்டு போகிறள்)

## காட்சி 12.

(வித்யாவதி வீடு. கையிலே உள்ள ஓலையை பரபரப்போடு படித்துக் கொண்டிருக்கிறள் வித்தியாவதி.)

"பாண்டியன் ஸ்ரீ வல்லவன் படையெடுக்கு முன், காஞ்சியிலே நமது பன்றிக்கொடி பறக்க வேண்டும். பாண்டியன் நமது நேச மன்னன் எனவே நம்மை எதிர்க்க மாட்டான்; பல்லவத்தை கைப்பற்ற சாதகமான சூழ்நிலை. தாமதம் கூடாது. உடனே சந்திரவர்மனைக் கொன்று விடவும். மிக அவசரம்."

—தைலபன்,
சாளுக்கிய மன்னன்.

மைத்ரே:- (வந்து) வித்யாவதி! என்ன ஓலை!

(வளரும்)

## தமிழக சட்டசபையில்.

வருகிற எப்ரலில் சென்னை ராஜ்யத்தில் நடக்கப்போகும் தேர்தல்களில் மொத்தம் 205 எம். எல். ஏ க்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்களில் 6பேர்கள் சென்னையுடன் இணையப் போகும் தென் திருவாங்கூர் பிரதிநிதிகள்; 39 பேர்கள் ஷெட்யூல்டு வகுப்பினரின் பிரதிநிதிகள்.

(இப்பொழுது சென்னை அசெம்பிளியில் 230 ஸ்தானங்கள் இருக்கின்றன.)

சென்னை ராஜ்யம், பார்லிமெண்டுக்கு 41 மெம்பர்களைத் தேர்ந்தெடுக்கும். (இவர்களில் ஒருவர் நமமுடன் சேரப் போகும் தென் திருவாங்கூர் பிரதிநிதியாக இருப்பார்)

சென்னை அசெம்பிளியின் ஒவ்வொரு தொகுதிக்கும் சராசரி $1\frac{1}{2}$ லட்சம வோட்டர்கள் இருப்பார்கள். பார்லிமெண்டரி தொகுதி ஒவ்வொன்றுக்கும் இதைப்போலஐந்துமடங்கு வோட்டர்கள்.

சென்னை மேல் சபையில் 48 அங்கத்தினர்கள் இருப்பார்கள். இவர்களில் 16 பேர்கள் அசெம்பிளியால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள்; 16 பேர்கள் ஸ்தலஸ்தாபனங்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள்; 4 பேர் பட்டதாரிகளின் பிரதிநிதிகள், இன்னொரு 4 பேர் உபாத்தியாயர்களின் பிரதிநிதிகள்: பாக்கி எட்டு பேர்களை; கவர்னர் நியமனம் செய்வார்.

ஆ. க.

வள்ளுவர் நெஞ்சம்.

### உலக வாழ்த்து-எ.

அதிகாரம்-க. பாட்டு-எ.

**தனக்குவமை இல்லாதான்**
**-தான்சேர்ந்தார்க்கு அல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது.**

பலகாரணங்களால் பொதுவாக மனக்கவலை ஏற்படும். அந்தக் கவலையை மாற்றுவதற்கு வழி, கவலையின் காரணத்தை யறிந்து தக்க காரியத்தைச் செய்வதேயாகும். அதற்குத் தன்னைக் காட்டிலும் அறிவும், அனுபவமும் உள்ளவரின் நட்பும் அன்புங் கிடைத்தாலன்றி அரிதாகும்.

விளக்கம்:

தனக்குவமை—தன்னிலும் அறிவாற்றல் மிகுந்தவர்.

—மீ. சு. இளமுருகு பொற்செல்வி.

### இலங்கை 'பகுத்தறிவு' முகவர்.

தோழர், ப. சுப்ரமணியம், பகுத்தறிவுப் பண்ணை, 121. செட்டியார் தெரு, கொழும்பு. இலங்கையிலே நம் இதழ் விற்க விரும்புவோர் இவருக்கு எழுதுக.

## முன்னேற்றப்—
## —பாதையிலே

### சேலம்.

சென்ட்ரல் டாக்கீசுக்கு முன்பு, வேங்கடப்ப செட்டியார் ரோடில் அமைந்துள்ள, சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக அலுவலகத்தை 4-11-56 மாலை 4-மணிக்கு கவிஞர், கண்ணதாசன் திறந்து வைப்பார்.

—ஜி. பி. சோமசுந்தரம், செயலாளர்.

### சென்னை.

தி. மு. க. 27-வது வட்டம் (15, பிள்ளையார் கோவில் தெரு) துவக்கவிழாப் பொதுக்கூட்டம். 14-11-56 மாலை, நடைபெறும். தலைமை: ஏ. த. மாணிக்கம், பொதுச் செயலாளர், நாவலர், நெடுஞ்செழியன், என். வி. நடராசன், ஆ. இராசன், வே. அன்புமணி ஆகியோர் பேசுவர்.

—W. P. B. சுந்தரன், செயலாளர்.

### இலங்கை.

மூன்றாவது திருக்குறள் மாநாடு, 3, 4-11-56 இருநாட்களிலும் பம்பலப்பிட்டி, இந்துக் கல்லூரி சரசுவதி மண்டபத்தில் நடைபெறும. பல தமிழறிஞர்கள் கலந்துகொள்வர். இசையரங்குகள் நடைபெறும். தலைமை: திரு. என். மாணிக்க இடைக்காடர், புலவர்மணி, ஏ. பெரியதம்பி(பிள்ளை) தோழர்கள்: கி. மனோகரன். திருச்சி, கி. ஆ. பெ, விசுவநாதன், டாக்டர், அ. சிதம்பரநாதனர், தோழியர், நேசமலர். மற்றும பலர் சொற்பொழிவாற்றுவர்.

—சி. சேதுராமன், செயலாளர்.

### முகவரி மாற்றம்.

இதுவரை, மதுரை கட்டுபாளையம் 4-ம் எண்ணில் இயங்கி வந்த தி மு. கழக மதுரை நகரக்கிளை, மதுரை மாவட்டக் கிளை 1-11-56 முதல் 66, மேலக்கோபுரத் தெரு, மதுரை என்ற முகவரியில் இயங்கும். தோழர்கள் புது முகவரிக்கே தொடர்பு கொள்ளவும்.

—எஸ். முத்து, செயலாளர்,


வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த
செல்வம் ராணி
&
சேகர் ஊதுபத்திகளை
வாங்கி உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்:
வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,
3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

# கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:

● அ. மு. சாமி,
க. உயர்நிலைப்பள்ளி,
பட்டுக்கோட்டை.

**இரா. குமாரசாமி, சென்னை-5:**

கே: இராமன் மகாவிஷ்ணு அவதாரம் புத்தரும் அந்த அவதாரமே என்கிறார்கள். இராமன் நெற்றியில் வைணவச் சின்னமாக நாமம் இருக்கிறது; புத்தர் நெற்றியில் அது ஏனில்லை?

ப: புத்தர் வேத—வைதிக மதத்தின் பகைவர். அவரை விஷ்ணுவின் அவதாரம் என்பது வைதிகரின் பலவீனப்பித்தலாட்டம்! இப்போதும் பௌத்தர்கள் சற்று ஏமாந்தால், புராணவாணிபர் புத்தர் சிலைக்கு நாமம் போட்டுவிடுவார்களே!

* * *

கே: அறிவின் எல்லை எது?

ப: செவ்வையான வாழ்க்கை!

**சி. சு. தேவராமன், சிறுதையூர்.**

கே: ஒருவனுக்கு எப்போது லட்சியம் ஏற்படும்?

ப: நெருக்கடியும், துயரும் நேரும்போது.

* * *

கே:- உங்கள் பெயருக்கும் பகுத்தறிவுக்கும் ஒத்து வருகிறதா?

ப: ஏன் வராது? சிறந்த வீரம் படைத்தவனை வீரன் என்பதுபோல, நல்ல கண்களைப் படைத்தவனை கண்ணன் என்பதில் தவறில்லையே!

**அ. மு. சாமி, பட்டுக்கோட்டை.**

கே: ஆளவந்த ஆணவக்காரர்கள், பகுத்தறிவுப் பாசறையிலே தென்றல் வீச, முரசொலி முழக்க தமிழ்நாடு தருவார்களா?

ப:- அவர்களாகத் தரமாட்டார்கள் தோழரே! நாம்தான் முயன்று பெறவேண்டும்.

● கே: "அந்தணர்" என்ற சொல் யாருக்குச் சொல்லப்பட்டது? அஃது பார்ப்பனருக்குப் பொருந்துமா?

ப: எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு வாழ்வோர், அந்தணர். ஆடு, மாடுகளைக் கொலைசெய்து யாகம் புரியும் பார்ப்பனர்க்கு அப்பெயர் பொருந்தாதே!

**கு. இர. பரமசிவன், காரமடை.**

கே: தி.மு.க. வின் கொள்கைப்படி சாத்தியப்பட்ட அளவுக்குக்கூட நடக்காதவன் அதிலே உறுப்பினனாக இருப்பது கட்சிக்கு துரோகமல்லவா?

ப: கட்சிக்குத் துரோகம் மட்டுமல்ல; கொள்கைக்குத் துரோகம்; இனத்துக்குத் துரோகம்; தனது முன்னேற்றத்திற்கும் துரோகம் புரிவதாகும்!

* * *

கே:- எம். ஆர். ராதா, டி. கே. எஸ். சகோதரர்கள், நவாப் ராஜமாணிக்கம் இவர்களில், நாடக சேவையில் சிறந்தோர்—பகுத்தறிவு உலகின் பாராட்டுதலைப் பெறுபவர் யார்?

ப: நடிகவேள். எம். ஆர். ராதாவைக் கூறலாம்; டி. கே. எஸ். சகோதரர்களையும் சேர்க்கலாம். நவாப் ராசமாணிக்கம் நாடகமா நடத்துகிறார்? அவர் கம்பெனியே, மதுரை ஸ்ரீதேவி பாலவிநோத சங்கீத சபை தானே!

**இல இரா. மெய்யழகன், துளசம்பட்டி.**

கே: ஆண்டவன் ஒருவனே பெரியவன், அவனுக்கே எல்லாந் தெரியும் என்கிறார்களே; உண்மையா?

ப: கிடையாது. தன்பெண்டாட்டியின் கழுத்துத்தாலியை அறுப்பவனைத் தடுக்கவோ, பிடிக்கவோ மட்டுமல்ல; இன்னாரெனத் தெரிந்து போலீசுக்குத் தகவல் கொடுக்கவும் முடியாதவனே, ஆண்டவன்.

[1-ம் பக்கம் தொடர்ச்சி]

இந்திய உபகண்டத்திற்கு "பாரதம்" என்று பெயரிட்டு அதனைப் பிடிவாதமாக அமலாக்க முயன்றுவரும் காங்கிரஸ்காரர்களுக்கும், கிருஷ்ணனைக் கடவுளென்று வழிபட்டு—விழாவெடுத்து— பஜனைபாடிப் பிழைப்பு நடத்தும் பஞ்சாங்கச் சுவடி — பஜகோவிந்தங்களுக்கும் தோழியர் லீலாவதியின் கருத்துரை தக்கதோர் அறிவு விளக்கமன்றோ?

"கோயிலுக்கு வரமாட்டேன், அங்கு என்ன கிடக்கிறது? மக்கள் பணியே இறை வணக்கம்" என்று கூறிடும் உத்தமர் விநோபா, அந்தக் கொடியவனின் கொலை நூலாம் "கீதைக்"குப் புதிய பாஷ்யம் புனைந்து, தலையிலே சுமந்து கொண்டு ஊர்சுற்றுவது கேவலமல்லவா? கொலைகாரன் புகழ் பாடுவது அறிஞர்க்கு அழகாகுமா?

பக்தசிகாமணிகளே! வைதிக விற்பனர்களே! "கிருஷ்ணன் கடவுளல்ல, கொலைகாரன்!" என்று நாங்கள் சொன்னோம்; இப்போது நல்லவர்கள் சொல்லுகிறார்கள்; நாடும் சொல்லத் தொடங்குகிறது! இனியேனும் உண்மையுணர்ந்து திருந்துவீர்களா? மூடநம்பிக்கை—முற்றடிமை விளையாட்டினை விடுவீர்களா?

—வாலி.


## பாரிஸ் அழகிகள்.

கவர்ச்சிமிகுந்த பாரிஸ் யுவதிகளின் இயற்கை அழகை பலவித படுக்கையறைத் தோற்றத்தில் காணவல்ல 36 அசல் போட்டோ படங்கள் ரூ. 10 முன்பணம் அனுப்பினால் தபால் செலவு இலவசம். சாம்பிள்கள் கிடையாது.

வீனஸ் டிரேடிங் கம்பெனி(த ப)
தபால் பெட்டி 1693,
சென்னை-1.

# தமிழ்நாட்டுக் காங்கிரஸ் இளைஞனுக்கு!

அருமை இளைஞனே! இது எனது இரண்டாவது மடல். சிறிது சினத்தோடுதான் இருப்பாய்! பாராட்டப் போகிறேன் என்று தொடங்கினேன்; அதற்குரிய காரணங்களை விளக்குவதற்காகப் பேனாவை விரட்டினேன்; இந்தப்பாழும் பேனாவோ 'ஒரு சின்ன ஐயம்' என்று கூறி எங்கோ தடம் மாறிச் சென்று விட்டது. இப்படித்தான் நீர் எண்ணியிருக்கிறீர்! 'மாளிகை' வாசிக்கு இது சிறிது கசப்பாகத்தான் இருக்கும். இருப்பினும் எனது ஐயங்களை எடுத்துரைப்பதன் மூலமாகத்தான் உம்மைப் பாராட்டுவதற்குரிய காரணங்களைத் தெளிவாக உணர்த்த முடியும். எனவே பொறுத்தருள்க!

காங்கிரசுமருத்துவக்கல்லூரி மங்கை; எனவே மணமலர் சூடமாட்டாள்—சூடக்கூடாது என்றேன். இந்த இடத்தில் எனக்கே ஒரு சந்தேகம் எழுந்துவிட்டது! எந்தக் காங்கிரசு? தமிழ்நாட்டில் இருப்பது ஒரு காங்கிரசல்லவே! பாலை நிலத்தில் நீர்ச்சுனைகளும், பசும்புல் வெளிகளும் அங்கங்கே தென்படுவதுபோல காங்கிரசிலும் பாலைவனச் சோலைகள் இருக்கத்தான் செய்கின்றன! தமிழ்நாடு என்னும் பெயரை விரும்பித் தன் தலையைக் கொடுத்த பெருமகனைக் காங்கிரஸ்காரன் அல்லவென்று கூற, எதற்கும் துணிந்த காங்கிரசுள்ளும் ஆளில்லை! இதெல்லாம் கிடக்கட்டும். நீ எத்தகையவன்? நீ சார்ந்திருக்கும் காங்கிரசு எத்தகையது என்பதுதான் யாவருமறிந்தது—நாடே சிரிப்பது! மலர்மணத்தால் மருத்துவத்திற்குக் குந்தகம் நேரும் என்றெண்ணும் மங்கையைப்போலத் தமிழ்நாடு என்னும் பெயரைச் சொன்னாலே தன் ஆட்சி முழுகிவிடும் எனக் கருதும் பச்சைத்தமிழன் காங்கிரசு! ஆனால் நீ—உனது உள்ளம்—அது, 'தமிழ்நாடு' என்னும் பெயரைப் பொறுத்தமட்டிலேனும் எத்தகையது?

நீ சார்ந்துள்ள காங்கிரசைக் குறித்துச் சிறிது பகர்ந்தபின்னர், இதற்கு வருவோம். 'வீரமுழக்கம்' செய்யும் இளவலே! அண்மையில் ஒருவர் செத்துப் போனார் என்பது உனக்குத் தெரியுமா? 'ஒழியட்டும்—கூட்டத்தில் ஒன்று குறைந்தது' என்கிறாயா? காய்ந்த மரத்திலும் துளிரில் சிறிது பசுமையிருக்கக் கண்டிருக்கிறேன். எனவே உன்னிடத்திலும் சிறிது இரக்கத்தை எதிர்பார்க்கிறேன்!

தள்ளாத வயதில் உண்ணாநோன்பை மேற்கொண்டு இந்தத் தமிழினமும் நாடும் பீடுறுவதை நாடி உயிர்நீத்த அந்த ஆண்மையாளனை எண்ணிப்பார்! தமிழ்நாடு என்னும் இனியபெண் தன் சப்பை வாயிலே தவழ வேண்டும்—தன் பேரப்பிள்ளைகளின் மழலையிலே தத்த வேண்டும் என்பதைக் குறிக்கொண்டு உயிர்நீத்த அப் புனிதனைச் சிறிதே நினை! வயது ஆக ஆக உயிர்மேல் ஆசை வளரும்! உலகியலிலே காணத் தவறியிருப்பினும் உளவியல் ஏட்டிலேனும் இதை அறிந்திருப்பாய். இளைஞன் ஒருவன் இளமை உணர்வால் உந்தப்பட்டு இத்தகு செயலில் உயிர்கொடுப்பது எளிது! வீரன் வடக்கிருத்தல் பழந்தமிழகத்தில் மிகச் சாதாரண ஒன்று. ஆனால், வயதான ஒருவர்—தொண்டு கிழவர்—கொள்கைக்காக உடலை வதைத்து மடிகிறார் என்றால், அவன் பெருமைக்கு அளவுகோல் ஏது!! எனக்குத் தெரிந்த அளவில் தமிழில் 'அண்ணல்' என்ற சொல்லால் இவரை அழைக்கலாம்.

இவ்வளவுக்குப் பிறகும் அசையப் போவதில்லை உன் காங்கிரஸ்! எதற்குமே அசையாது—காரணம்? பசையற்று விட்டது! இந்த 'வறட்சி'யை மங்கையுடன் உவமித்துக் கூறுவது கூட அவ்வளவு பொருத்தமானதல்ல! அந்தச் சொல்லே கறைப்பட்டுவிடும்! அதை விடக் காங்கிரசை, பல்விழுந்து, உடல் கூனி, நரைத்த முதுகிழவிக்கு ஒப்பிடலாம்—அவளும் விதவைக் கிழவி—வெறும் விதவைமட்டுமல்ல, நாதியற்றவள்! அவளுக்கு வாழ்வும் ஒரு கேடா? இப்படித்தான் நீ காங்கிரசைப்பற்றி கருதியிருக்கிறாய்!

'சுத்த அபாண்டம்! என் அருமைக் காங்கிரசுக்கும் எனக்கும் கலகமூட்டும் நாரதப் பேச்சு இது! அவன் வாழ்வையே நான் குறியாகக் கொண்டிருக்கிறேன் என்பதை நீயே முதலில் ஒப்புக் கொண்டுவிட்டு, நான் வேறுவிதமாக நினைப்பதாகக் கூறுகிறாயே; இது அடுக்குமா?' என்றாய்; விளக்கமாக மொழிந்து விடுகிறேன்.

தமிழ்நாடு என்ற பெயரை நீ விரும்புகிறாய்; தமிழ்நாடு காங்கிரசு மாநாடு என்ற தொடரை மட்டும் வைத்துக் கொண்டு நான் இந்த முடிவுக்கு வந்துவிடவில்லை. சென்ற ஆண்டு மாநிலத் திருத்தமைப்புக் குழுவின் அறிக்கை வெளியானபோது, சென்னை மாணவர் ஒருநாள் மறியல் நடத்தினர். மறியலுக்கான காரணங்களில், தமிழ்நாடு என்ற பெயர் சென்னை மாநிலத்திற்குச் சூட்டப்பட வேண்டும் என்பது சிறப்பான ஒன்று. அம் மறியலில் கலந்து கொண்டவர்களுள் நீயும் ஒருவன்! கட்சி மாறுபாட்டால் அன்று கடற்கரைக் கூட்டத்தில் நம்மிடையே சிறிது பூசல் ஏற்பட்டது. இன்னும் உன் நினைவைவிட்டு அகன்றிருக்க முடியாது. எனவே தமிழ்நாடு என்னும் சொல் எனக்கு இனிப்பதுபோல் உனக்கும் இனிக்கிறது என்றுதானே நான் கருத முடியும்?

ஆனால், சேலத்தில் நீ உன் விருப்பத்தைத் தெரிவிக்கவில்லை! இது எதைக் காட்டுகிறது? 'கிழவியைப் போய் மலரணியச் சொல்வதா!' என நாணியிருக்கிறாய் என்பதைத்தான் காட்டுகிறது. திக்கற்ற விதவைக் கிழவியிடம் அவ்வாறு பேசுவது கேலிப்பேச்சாகுமே என்று கருதி, நாக்குக் கூசி ஊமையாகிவிட்டாய்! மணம் நின் மூக்கைத் துளைக்கிறது; காங்கிரசின் பரிதாப நிலையோ அவள்மீது கழிபேரிரக்கம் கொள்ளச் செய்கிறது!

இந்த இக்கட்டான நிலையில், சிந்தனைக் கதவுகளுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு, மாநாட்டைக் கூட்டினாயே அந்தத் துணிச்சலைப் பாராட்ட வேண்டும். ஐம்புலனையும் அவித்துச் செயலாற்றிய நின் மாவீரத்தை நெஞ்சால் நினைந்து எழுத்தால் வழுத்துகிறேன். பிறகு சந்திப்போம். வணக்கம்.

"இளந்தமிழன்"

# 1-11-56

முதல்

தென்னாடெங்கும்

★

மாடர்ன் தியேட்டர்ஸின்

மகத்தான திரைச்சித்திரம்

★




# ★ பாசவலை ★




M. K. ராதா, G. வரலட்சுமி,
M. N. ராஜம், E. V. சரோஜா,
கருணாநிதி, V. K. ராமசாமி

முதலியோர் நடித்தது.

★

டைரெக்ஷன்:
A. S. நாகராஜன்.

சங்கீத அமைப்பு:
விஸ்வநாதன் &
ராமமூர்த்தி.

வசனம்: ப. கண்ணன்.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்–1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.